பக்கங்கள் 8

# ஈழநாடு
The EELANAADU

50 சதம்

மலர் 22 யாழ்ப்பாணம் ஆடி 15 தமயூசல் 17 புதன்கிழமை இதழ் 170 30-7-80

## ஹாக்கி: இந்தியாவுக்கு தங்கப்பதக்கம்!

(மாஸ்கோ)

ஒலிம்பிக் ஹாக்கி சுற்றுப் போட்டியில் இந்தியா வெற்றி பெற்று தங்கப்பதக்கத்தை மீண்டும் கவிகரித்துக்கொண்டது!

நேற்று நடைபெற்ற ஹாக்கி இறுதிப் போட்டியில் இந்தியாவும் ஸ்பெயினும் மோதிக்கொண்டன. இடைவேளை வரை இந்தியா மட்டுமே இரண்டு கோல்களைப்போட்டது. இதனைத் தொடர்ந்து ஏற்பட்ட கடுமையான போராட்டத்தில், ஸ்பெயின் மூன்று கோல்களை மளமள என்று போட்டதும், இந்தியாவின் நிலை பெரும் கேள்விக்குறியாக மாறியது. ஆனாலும் கடைசிநிமிட நேரத்தில் இந்தியா இன்னொரு கோலைப் போட்டு (4—3, ஒரு கோல் வித்தியாசத்தில் வெற்றி பெற்று தங்கப்பதக்கத்தைப் பெற்றுக்கொண்டது.

★ மாவட்ட அபிவிருத்திச் சபைகள்

# சட்டமூலம் அடுத்தமாதம் சமர்ப்பிக்கப்படும்

## நெடுஞ்சாலைகள் அதிகார சபையும் அமைக்கப்படும்

### முல்லைத்தீவில் பிரதமர் 'பிரேமா'

(முல்லைத்தீவு)

மாவட்ட அபிவிருத்திச் சபைகளை அமைக்க வழிவகுக்கும் சட்டமூலம், அடுத்தமாதம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் என்று பிரதமர் திரு. ஆர். பிரேமதாசா இங்கு தெரிவித்துள்ளார்.

பிரதமர் திரு. ஆர். பிரேமதாசா நேற்றுக் காலை ஒன்பது மணியளவில் ஹெலிகொப்டர் விமானம் மூலமாக முல்லைத்தீவுக்கு விஜயம் செய்தபோது, முல்லைத்தீவு மாவட்ட அமைச்சர் ஜனாப் ஏ. ஆர். மன்சூர், முல்லைத்தீவு அரச அதிபர் திரு. ஒஸ்டின் ஜயவர்த்தனா, யாழ். மாவட்ட அமைச்சர் திரு. யு. பி. விஜயக்கோன், யாழ். அரச அதிபர் திரு. யோகேந்திரா துரைசுவாமி, மன்னார் மாவட்ட அமைச்சர் ஜனாப் மஹ்றூப் ஆகியோர் உட்பட பெருந்திரளான மக்கள் வரவேற்றனர்.

தமது விஜயத்தின் முதல் நிகழ்ச்சியாக வற்றாப்பளை அம்மன் கோவிலுக்குச் சென்று விசேட பூசையில் கலந்துகொண்ட பிரதமர் திரு. ஆர். பிரேமதாசா பின்னர் நடைபெற்ற முல்லைத்தீவு மாவட்ட மகாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றினார். இம் மாநாட்டில் முல்லைத்தீவு எம். பி. திரு. எக்ஸ். எம். செல்லத்தம்புவும் கலந்து கொண்டார்.

#### மாவட்ட அபிவிருத்தி சபைகள்

முல்லைத்தீவு மாவட்ட மகாநாட்டில் பிரதமர் திரு. ஆர். பிரேமதாசா பேசுகையில் கூறியதாவது:

"மாவட்ட அபிவிருத்தி சபைகளை அமைக்க வழிவகுக்கும் சட்டமூலம் அடுத்த மாதம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும். இச் சபையில், பாராளுமன்ற அங்கத்தவர்களும் உறுப்பினர்களாக இருப்பார்கள். ஆனால் சபைத் தலைவர், வாக்கெடுப்பு மூலமாகவே தெரிவு செய்யப்படுவார்.

"இன, மத, சாதி வித்தியாசமின்றி நாடு முழுவதையும் ஒரே சீராக அபிவிருத்தி செய்யும் முயற்சியின் ஓரம்சமாகவே மாவட்ட அபிவிருத்திச்சபை

(8ம் பக்கம் பார்க்க)

## வணசிங்கா மீண்டும் மட்டக்களப்பில் நியமனம்?

(மட்டக்களப்பு)

இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கத்தலைவர் திரு. டி. எஸ். ஜே. வணசிங்கா, கொழும்பிலிருந்து மட்டக்களப்பு மாவட்டத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

மட்டக்களப்புப் பகுதியில் பாடசாலை வழங்கப்படாததால் பட்டிருப்புத் தொகுதியிலுள்ள பழுகாமம் மகாவித்தியாலயத்தில் தற்பொழுது கடமையாற்றிவரும் திரு வணசிங்காவை மட்டக்களப்பு தொகுதியிலுள்ள பாடசாலையொன்றில் கடமையாற்ற அனுமதிக்கும்படி கல்வித் திணைக்களத்திற்கு கல்விச் சேவை ஆணைக்குழு அறிவித்துள்ளது.

திரு வணசிங்கா மட்டக்களப்பு அரசடி மகாவித்தியாலயத்தில் அதிபராகக் கடமையாற்றி பின்னர் கோட்டைமுனை அந்தோனியார் மகாவித்தியாலயத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டார். இவரது இடமாற்றம் அரசியல் பழிவாங்கலென்று எதிர்க்கட்சித் தலைவர் திரு அ. அமிர்தலிங்கம் ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனாவிற்கு சுட்டிக்காட்டி இந்த இடமாற்றத்தை உடனடியாக ரத்துச் செய்யுமாறு கேட்டிருந்தார்.

திரு வணசிங்காவிற்கு மட்டக்களப்பிலுள்ள பிரபலமான பாடசாலையொன்றில் நிரந்தர அதிபர் பதவி வழங்கப்படலாமென்று எதிர்பார்க்கப்படுகிறது. (வெ)

## மதுவின் தீமைகளைவிளக்கும் கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

யாழ். பத்திரிகையாளர் சங்கத்தில் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை காலை நடைபெறும் "மதுபானத்தை அளவுக்கதிகமாக அருந்துவதினால் ஏற்படும் தீமைகள்" பற்றி பொது மக்களுக்கு விளக்கும் கருத்தரங்கில்; "எமது சமூகத்தில் மதுபானத்தினால் ஏற்படும் பாதிப்புகள்", என்னும் பொருள் பற்றி பராமரிப்பு அதிகாரி திரு. விஜயரத்தினமும், "மதுபானமும் குற்றமும்" என்னும் பொருள்பற்றி யாழ் உதவி பொலிஸ் அதிபர் திரு. எம். எஸ். எம். நிஸாரும் உரையாற்றுவார்கள்.

"இளைஞரும் மதுபானமும்" என்னும் பொருள்பற்றி வண. ஜே. சர்வானந்தாவும் "மதுபானம் பற்றிய நீதி நோக்கு" என்னும் பொருளில் யாழ். குடும்ப நீதிமன்ற நீதிபதி திரு. எம். டி. வேலாயுதனும் உரையாற்றுவர்.

"மதுபானமும் சமயமும்" பற்றி வணபிதா ஜே. பி. செல்வராஜா, திரு. வே. கனகரத்தினம், அல்ஹாஜ் மீரா முகைதீன் ஆகியோர் உரையாற்றுவர். டாக்டர் ஞானபதி, மனநோய் வைத்திய நிபுணர் டாக்டர் ஜி. எஸ். ஞானசிங்கம், வைத்திய நிபுணர் டாக்டர் ஜே. ரி. சேவியர் ஆகியோரும் மதுபானத்தினால் ஏற்படும் தீமைகள் பற்றி இக் கருத்தரங்கில் உரையாற்றுவர்.

## ஹோம் பினான்ஸ் லிமிட்.

82, கன்னாதிட்டி றோட், யாழ்ப்பாணம்.

வருடாந்தம் ஆகக்கூடுதலான

25% வட்டியை

வழங்குகின்றது

ரூபா 1000/- க்கு மேற்பட்ட எந்த முதலீட்டிற்கும் மாதாந்தம் வட்டி வழங்கப்படும்

உங்கள் பணத்தை விவேகமாக முதலீடு செய்யுங்கள்

தலைமையகம்:
463, காலிவீதி, கொழும்பு-3.
தொலைபேசி: 89190



யாழ். மாவட்ட பொலிஸ் அதிபராகக் கடமையாற்றி கொழும்புக்கு மாற்றலாகிச் செல்லும் திரு. கிங்ஸ்லி விக்கிரமசூரியா கடந்தவாரம் பத்திரிகையாளர்களுக்கு தேநீர் விருந்தளித்தார். அந்த விருந்தில் நாளை மறுதினம் முதல் யாழ். மாவட்ட புதிய பொலிஸ் அதிபராகப் பதவியேற்கவிருக்கும் திரு ஜயதிஸ்ஸ ஹேரத்தும் கலந்து கொண்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணிவாக்கு

பொறிகளையும் மனதையும் கட்டுப்படுத்தலே உண்மையான வீரமும் ஆண்மையுமாகும்.

—சுவாமி விவேகானந்தர்

# எல்லைகள் பாதுகாக்கப்படாததால்

## குடியேறியவர்களைத் தடுக்கமுடியவில்லை

(நேற்றைய தொடர்ச்சி)

சுதந்திரத்தின் பின் முஸ்லிம்கள் அதிகம் வாழும் கிழக்கு வங்கம் பாகிஸ்தானுடன் இணைந்து கிழக்குப் பாகிஸ்தான் ஆகியது. [illegible]

[illegible]

மத்திய அரசுக்கு ஒரு தலையிடி கொடுக்கும் பிரச்சினையாக உருவெடுத்துள்ளது எனப் பேசப்படுகின்றது.

அஸாமைச் சேர்ந்த பிரதேசமான திருமதி காந்தியின் அரசாங்கம் பிரகடனப்படுத்தியதுடன் [illegible]

## அஸாம் பற்றி ஒரு கண்ணோட்டம்

[illegible]

### ஜனதா கட்சி தவறிவிட்டது

[illegible]

## அ. சுபாஸ்கரன் பி. ஏ. (சிறப்பு)

[illegible] அஸாமியப் பிரச்சினை காணப்பட்டபோதும்கூட நேபாள, வங்கதேச குடியேற்றக்காரர்கள் என்றவகையில் இது ஓர் வெளிவிவகார பிரச்சினையாகவும் விளங்குகின்றது. [illegible] குடியேற்றக்காரர்களை வெளியேற்றல் எனும்போது மத்திய அரசு இரு வகைகளில் பிரச்சினையை எதிர்கொள்ளவேண்டியுள்ளது. ஒன்று குடியேற்றக்காரர்களின் ஒரு பகுதியினர் வெளிநாட்டவர் என்பதனால் சம்பந்தப்பட்ட நாடுகளுடன் தொடர்புபட்ட பிரச்சினையாக இது உள்ளமை. மற்றொன்று குடியேற்றக்காரர்களின் மறுபகுதியினர் வெளி மாநிலக்காரர்களாக இருப்பதால் இந்திய குடியரசின் பிரஜைகள் அனைவரும் அதன் எல்லாப்பகுதிகளிலும் வாழும் உரிமையை மறுத்தல் சம்பந்தமான பிரச்சினையாக உள்ளமை. இதனால் தான் இக்கொந்தளிப்பு நிலை [illegible] மாணவர்கட்கு எதிரான அடக்குமுறை நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ளவோ பேச்சுவார்த்தைக்கு இடமில்லை எனப் பிடிவாதமாக நிற்கவோ முடியாமல் பேச்சுவார்த்தைக்கு இணங்கியுள்ளனர் எனச் செய்திகள் வெளிவந்துள்ளன.

முடிவாக நோக்கும்போது அஸாமில் இன்று நிலவும் இக் கொந்தளிப்பு நிலை ஏனைய வடகிழ் இந்தியப் பிராந்தியங்கட்கும் பரவக்கூடும். அத்துடன் இது அனைத்திந்திய மாநிலங்களிலும் சில சில்லறைப் பிரச்சினைகளை உருவாக்கும். இது மேலும் இந்து-முஸ்லிம் பிரச்சினை என்ற நோக்கையும் நிலைவுபடுத்தச் செய்யும். உண்மையில் வெளியாரை வெளியேற்றல் என்பது சிக்கல் நிறைந்த ஓர் விடயமாகும். [illegible] இருந்து 1977ம் பொதுத்தேர்

(5ம் பக்கம் பார்க்க)

## நமது நோக்கு

### நல்லுறவுக்கு வழி

யாழ்ப்பாண மாவட்டத்தில் அமைக்கப்பட்டுள்ள [illegible]

[illegible]

## இன்றைய றமழான் சிந்தனை

இஸ்லாமை தைரியமாக எதிர்த்து நிற்கும் மனோவலிமையை சகிப்புத்தன்மையை தரக்கூடியது இறைவன் வகுத்த மேன்மையான நோன்பே.

தொகுப்பு:

மௌலவி பௌசியா கரீம்

ஸஹர் முடிவு — 4-28

நோன்பு திறக்கும் நேரம்: 6-31

[illegible] நாளின் தேவைகளிலிருந்து பாதுகாப்பும் அல்லாஹ்வின் தலைசிறப்பும், [illegible] பாக்கியங்களும் பெறுவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

